# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2022 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

---

*(2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---


*2022, நவெம்பர் மாதம் 18 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 15.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 2022 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

*[2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]*

*ச. வ.- ஓ. 80/2021*

### *1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப்பெயர்*

**1.** இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சட்டத்தின் 281 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 281 ஆம் பிரிவு "பதினெட்டு வயதிற்குக் குறைந்தவராக நீதிமன்றத்திற்கு தோன்றுமிடத்து," என்ற சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய ஆளினால் அத்தகைய தவறு புரியப்படும்நேரத்தில் பதினெட்டு வயதிற்கு குறைந்தவராகவிருக்குமிடத்து," என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 286 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 286 ஆம் பிரிவு, "இப்பிரிவிலும் 288 ஆம் பிரிவிலும், "சனாதிபதி" என்னும் சொல்லமைப்பு" என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "இப்பிரிவில், "சனாதிபதி" என்னும் சொல்லமைப்பு" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 288 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 288 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"(19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக் கோவையின் 53 ஆம் பிரிவின் கீழான தண்டனைத் தீர்ப்புகளை நிறைவேற்றுதல்*

288. எவரேனும் ஆள் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையினது 53 ஆம் பிரிவின்கீழ், தண்டனைத்தீர்ப்புக்குள்ளாகுமிடத்து, அத்தகைய ஆள் பதினெட்டு வயதிற்கு குறைந்தவர் களை தடுத்துவைப்பதற்கென ஏதேனும் எழுத்தி லான சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஒரு நிறுவன மொன்றில் தண்டனைத்தீர்ப்பில் குறித்துரைக் கப்பட்ட காலப்பகுதியொன்றிற்கும் அத்தகைய

எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமையவும் தடுத்துவைக்கப்படுதல் வேண்டும்.".

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*